அந்தியூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்

<u>முன்னிலை : திரு. மு. நாகேஷ் (பொ)</u>

ந.மு. எண். 431 /2023 நாள் 26.12.2023

பொருள் : தொழில்நுட்ப ஒப்புதல் – ஈரோடு மாவட்டம் – அந்தியூர் பேரூராட்சி – அந்தியூர் கிராமம் ரீ.ச.எண். 1293/3A1B–ல் 0.49½ செண்ட் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப் பிரிவிற்கான ஒப்புதல் வழங்கி அங்கீகரித்து உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. திரு. எம். அருள் மற்றும் 9 நபர்கள், 52, நஞ்சமடைக்குட்டை, மைக்கேல்பாளையம் என்பவரது விண்ணப்பம் நாள் 15.12.2023
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், ஈரோடு அவர்களின் ந.க.எண். RPV95VW7/2023/TCB நாள் 01.11.2023
3. அந்தியூர் சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண். 4281/2023 நாள் 05.10.2023.
4. அந்தியூர் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 284 / 2023 நாள் 27.12.2023
5. தொடர்புடைய ஆவணங்கள்

– – – – – – – –

<u>உத்திரவு :-</u>

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேரூராட்சி, அந்தியூர் கிராமம் ரீ.ச.எண். 1293/3A1B–ல் அமையும் 0.49½ செண்ட் பரப்பளவில் மனைப்பிரிவு அமைக்க பார்வை 1ல் காணும் விண்ணப்பதாரர் திரு. எம். அருள் மற்றும் 9 நபர்கள், 52, நஞ்சமடைக்குட்டை, மைக்கேல்பாளையம் என்பவரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் பார்வை 2ல் காணும் ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குனரால் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவின்படி பார்வை 3ல் காணும் பொது ஒதுக்கீடு ஷெட்யூல்டு பி இடத்தினை அந்தியூர் சார்பதிவாளர் அலுவலக தான சாசனம் எண். 4282/2023 நாள் 06.10.2023ன்படி அந்தியூர் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதை பேரூராட்சி மன்ற தீர்மான எண். 284 / 2023 நாள் 27.12.2023ன்படி பொது ஒதுக்கீடு இடத்தினை ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் கடிதத்தில் மேற்படி அந்தியூர் கிராமம் ரீ.ச.எண். 1293/3A1B–ல் அமையும் 0.49½ சென்ட் பரப்பளவில் அமைய உள்ள மனைப்பிரிவில் 7 மனையிடங்களாக பிரிக்கப்பட்டுள்ளமைக்கும், அம்மனைப் பிரிவில் பேரூராட்சிக்கு பொது ஒதுக்கீடு தானமாக ஒப்படைக்கப் பட்டுள்ளமைக்கும் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் அளிக்க பார்வை 4ல் காணும் அந்தியூர் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு மொத்த பிரிவிற்கு பேரூராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகைகள் அனைத்தும் மனைப்பிரிவு உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளதால், கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கீகாரம் செய்து உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. பார்வை 2ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் உத்திரவின் 1 முதல் 20 வரை மற்றும் சிறப்பு நிபந்தனைகள்படி உள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட இந்த மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. (இணைக்கப்பட்டுள்ளது)
2. பேரூராட்சி மற்றும் அரசு இதர துறைகளுக்கு சொந்தமான எந்த ஒரு இடமும் இந்த மனைப்பிரிவில் சேர்க்கக் கூடாது.
3. செயல் அலுவலரால் அவ்வப்போது கூறப்படும் அறிவுரைகளின்படி உரிமையாளர்கள் செயல்பட வேண்டும்.
4. தற்போது செலுத்தப்பட்ட மனைப்பிரிவு அங்கீகாரக் கட்டணத் தொகைகள் குறைவு எனத் தெரிய வந்தாலோ அல்லது தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டாலோ, வித்தியாசத் தொகையினை உடன் செலுத்தப்படல் வேண்டும்.
5. இந்த மனைப்பிரிவில் எந்த ஒரு மாறுதல்கள் செய்யப்பட்டாலோ, மனைகள் உட்பிரிவாக பிரிக்கப்பட்டாலோ, சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் முறையாக அனுமதி பெறப்படல் வேண்டும்.
6. பொது ஒதுக்கீடு இடம் ஆகியவை அந்தியூர் சார்பதிவாளர் சார்பதிவக தானசாசன எண். 4281/2023 நாள் 05.10.2023 மூலம் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்படைப்பு செய்யப்பட்ட

இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. ஒப்படைக்கப்பட்ட பொது உபயோக இடங்களை பேரூராட்சிக்கு பட்டா மாறுதல் செய்து அளிக்க வேண்டும்.

7. மனைப்பிரிவினிடையே செல்லும் குறைந்த மின் அழுத்தக் கம்பிப் பாதையை தங்களது சொந்த செலவில் சாலையின் போக்கில் மாற்றியமைக்க வேண்டும்.
8. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நகர் ஊரமைப்பு துறையின் அனைத்து நிபந்தனைகளும் பொருந்துவதாகும். நிபந்தனைகள் மீறி மனையிடங்கள் விற்பனை செய்யப்பட்டால் இவ்வலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் இம்மனைப்பிரிவு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

26/12/2023

செயல் அலுவலர் (பொ),
அந்தியூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

செயல் அலுவலர்,
அந்தியூர் தேர்வு நிலை பேரூராட்சி,
அந்தியூர்-638 501. ஈரோடு மாவட்டம்

26/12/23

இணைப்பு :-

1. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் – 1
2. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக மனைப்பிரிவு நிபந்தனை நகல் – 1

பெறுதல்

திரு. எம். அருள் மற்றும் 9 நபர்கள்,
52, நஞ்சமடைக்குட்டை,
மைக்கேல்பாளையம்.

நகல் :-

1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள், ஈரோடு.
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அந்தியூர்.